# மனித சித்தம்

❖ படைப்பில் ❖ கிருபையில்

❖ பாவத்தில் ❖ மகிமையில்

ஆர். பாலா

RP REFORMED PUBLICATIONS

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**மனித சித்தம்:**
**படைப்பில் – பாவத்தில் – கிருபையில் – மகிமையில்**

ஆர். பாலா

முதல் பதிப்பு: நவம்பர் 2021, இந்தியா

கிடைக்குமிடம்:

**சீர்திருத்த வெளியீடுகள்**
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர்,
அயனாவரம்,
சென்னை 600023.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி: 9445671113
ஈமெயில்: rpchennai23@gmail.com

கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த
மேலதிக தகவல்களுக்கு www.biblelamp.org
வலைப்பூவைப் பார்க்கவும்.

# அர்ப்பணம்

**அல்பர்ட் என். மார்டின்**

*(போதகர், இறையியலறிஞர், கிறிஸ்தவ தலைவர்)*

*கிறிஸ்துவால் ஆசீர்வதிக்கப்பட்ட அவருடைய போதக ஊழியத்திற்காகவும், போதகர்களுக்குப் போதகராக இருந்து ஆவிக்குரிய துணைபுரிந்திருப்பதற்காகவும், நல்ல நண்பராக இருந்து ஆலோசனைகள் தந்து ஊக்குவித்திருப்பதற்காகவும், கிருபையின் போதனைகளும், சீர்திருத்த இறையியலும் வளர்ந்துயர்வதற்காக தளராது அரும்பணிபுரிந்திருப்பதற்காகவும் இந்நூலை அவருக்கு அர்ப்பணிக்கிறேன்.*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அறிமுகம் | | 7 |
| 1. | மனித சித்தம்: உன்னால் முடியும்! | 13 |
| 2. | மனித சித்தம்: வரலாற்று இறையியல் பின்னணி | 19 |
| 3. | சுதந்திரமாக இயங்கும் மனித சித்தம் | 29 |
| 4. | நன்மையை மட்டும் நாடிச் செய்த சித்தம் | 39 |
| 5. | பாவமும் மனித சித்தமும் | 47 |
| 6. | மனித சித்தம்: நீயும் நானுமா? | 69 |
| 7. | கிருபையின் நிலையில் மனித சித்தம் | 87 |
| 8. | மகிமையில் மனித சித்தம் | 97 |
| 9. | கர்த்தரின் இறையாண்மையும், மனிதனின் பொறுப்பும் | 103 |
| 10. | தெரிந்துகொள்ளுதலும், மறுபிறப்பும், மனித சித்தமும் | 123 |
| 11. | மனித சித்தமும், சுவிசேஷ அறிவிப்பும் | 135 |
| 12. | குழப்பங்களுக்குத் தீர்வு | 161 |
| 13. | மனித சித்தம்: சில கேள்விகளும் சில பதில்களும் | 169 |

# அறிமுகம்

இன்று உலகில் இருந்து வரும் சுவிசேஷ ஊழியங்களை இரண்டு பிரிவுக்குள் நாம் அடக்கலாம். இவை இரண்டும் மனிதனுடைய சித்தத்தின் தன்மை பற்றிய விஷயத்தில் மாறுபாடான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. அந்த மாறுபாடான கருத்துக்களே அவர்களுடைய சுவிசேஷ ஊழியங்களின் தன்மையையும், அவற்றின் விளைவுகளையும் மாற்றி அமைக்கின்றன.

1. முதலாவது, மனித சித்தம் மனிதனுடைய பாவத்தினால் எந்தவித மாறுபாட்டையும் அடையாமல் நல்லதையும் கெட்டதையும் சரிசமமாகச் செய்யக்கூடியவிதத்தில் சுதந்திரமாக இயங்குகிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறது.

2. இரண்டாவது, மனிதனுடைய பாவம் அவனுடைய சித்தத்தை முழுமையாகப்பாதித்து அவன் எந்தவிதத்திலும் நன்மையைச் செய்யக்கூடாத நிலையிலும், பாவத்தை மட்டுமே இயல்பாகச் செய்யக் கூடியவனாகவும் இருக்கிறான் என்று விசுவாசித்து அதன் அடிப்படையில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறது.

இந்த இரண்டில், இரண்டாவது மட்டுமே வேதபூர்வமானது. கிறிஸ்துவோ, அப்போஸ்தலர்களோ, ஆதிசபையோ வரலாற்றில் ஐந்தாம் நூற்றாண்டுவரை மனித சித்தம் தன் இயல்புக்கு

ஏற்ப, அது காணப்படும் நிலையில் சுயமாக இயங்குகிறது என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். அதாவது, பாவத்தில் இருக்கும் மனிதனின் சித்தம் அவனுடைய பாவ இயல்புக்கு ஏற்ப நன்மையை செய்யமுடியாதவிதத்திலும், கிருபையின் ஸ்தானத்தில் இருக்கும் மனித சித்தம் அதன் இயல்புக்கு ஏற்ப நன்மையைச் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது என்று அவர்கள் நம்பினர். இருந்தபோதும் பாவமனிதன் பாவத்தை மட்டும் தன் இயல்புக்கு ஏற்ப முழுச்சுதந்திரத்தோடும், கிருபையின் ஸ்தானத்தில் இருப்பவன் தன் இயல்புக்கு ஏற்ப நன்மையானவற்றை முழுச்சுதந்திரத்தோடும் செய்வதாக அவர்கள் நம்பினர். பாவமனிதனின் சித்தமும், கிருபையில் மனிதனின் சித்தமும் அவரவர் இயல்புக்கு ஏற்ப சுயாதீனமாக இயங்குகிறது என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தனர்.

ஐந்தாம் நூற்றாண்டு மனிதனான பெலேஜியனே இதில் மாறுபாடான கருத்தை அறிமுகப்படுத்தினான். பாவத்தை முற்றாக நிராகரித்த பெலேஜியன், மனிதன் பாவத்தால் எவ்விதத்திலும், தன்னில் எந்தப் பகுதியிலும் கறைபடிந்திருக்கவில்லை என்றும், அதன் காரணமாக மனிதன் நல்லதையும் கெட்டதையும் இயல்பில் முழுச்சுதந்திரத்தோடு செய்யக்கூடியவனாக இருக்கிறான் என்ற வேதத்திற்கு மாறான போதனையை அறிமுகப்படுத்தினான். இந்த மனிதனின் போதனையை பெலேஜியனிசப் போதனை என்பார்கள். இதுவே பின்பு செமி–பெலேஜியனிசமாகவும், ஆர்மீனியனிசமாகவும் உருமாறி இன்றுவரை வரலாற்றில் சுவிசேஷத்தையும், திருச்சபை ஊழியங்களையும் பாதித்து வருகின்றது. இதற்கெதிராக ஆகஸ்தீன் முதலில் போர்க்கொடி எழுப்பினார். பெலேஜியனின் போதனைகளைத் தோலுரித்துக் காட்டி சத்தியத்தைப் பிரசங்கித்தார் ஆகஸ்தீன். அதற்குப் பிறகு 16ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள், முக்கியமாக மார்டின் லூதர் தன்னுடைய ‘சித்தத்தின் அடிமைத்தனம்’ (The Bondage of the Will) என்ற நூலின் மூலம் பெலேஜியனிசத்தினதும், செமி–பெலேஜியனிசத்தினதும் முகத்திரையைக் கிழித்துக் காட்டினார். உண்மையில் 16ம் நூற்றாண்டின் திருச்சபை சீர்திருத்தத்தின் முக்கிய போராட்டம் மனித சித்தத்தின் நிலை பற்றிய விவாதத்தை அடிப்படையாகக் கொண்டே

இருந்திருக்கிறது. இந்த இறையியல் அம்சமே மார்டின் லூதரை இராஸ்மஸோடு பெருந்தர்க்கங்களில் ஈடுபட வைத்து அவருடைய 'சித்தத்தின் அடிமைத்தனம்' என்ற நூல் வெளிவரக் காரணமாக இருந்தது. 16, 17ம் நூறாண்டுகளுக்குப் பிறகு 19ம் நூற்றாண்டில் சார்ள்ஸ் பினியும், பின்பு 20ம் நூற்றாண்டில் பில்லிகிரேகமும் செமி–பெலேஜியனிச, ஆர்மீனியனிசப் போதனைகளின் அடிப்படையில் மனித சித்தத்தைப் பற்றிய நம்பிக்கைகளைக் கொண்டிருந்து பாவ மனிதனைக் கிறிஸ்துவுக்காக 'தீர்மானம்' எடுக்க வைக்கும் ஊழியங்களில் ஈடுபட்டார்கள்; அத்தோடு அது கிறிஸ்தவ உலகில் பிரபலமாகவும் காரணமாக இருந்திருக்கிறார்கள். இத்தகைய போதனைகளையும் சுவிசேஷ நடவடிக்கைகளையும் அக்காலத்தில் சீர்திருத்த இறையியலறிஞர்களான ஜொனத்தன் எட்வர்ட்ஸ், அசகேல் நெட்டில்டன், பென்ஜமின் வோர்பீல்ட் போன்றோர் தங்களுடைய பிரசங்கங்களிலும், நூல்களிலும் சுட்டிக்காட்டி திருச்சபையை எச்சரித்து வந்திருக்கிறார்கள்.

இன்று நம்மினத்து சுவிசேஷத் திருச்சபைகளில் பெரும்பாலானவை மனித சித்தம் பற்றிய தவறான போதனைகளின் செல்வாக்குக்கு இரையாகி சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருகின்றன. தமிழினத்தில் சீர்திருத்த கிறிஸ்தவத்தின் செல்வாக்கு பெருமளவுக்கு இல்லாமலிருப்பதால் சுவிசேஷ ஊழியங்கள், பாவ மனிதன் ஆத்மீக செயல்களைச் செய்யக்கூடிய இயல்போடும் வல்லமையோடும் இருக்கிறான் என்ற தவறான நம்பிக்கையில் கிறிஸ்துவுக்காக அவனைத் 'தீர்மானம்' எடுக்கவைக்கும் தீவிரப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். 'கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன், கிறிஸ்துவுக்காகத் தீர்மானம் எடுத்தேன்' என்பதுபோன்ற வார்த்தைப் பிரயோகங்களும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதற்கான காரணம் இத்தகைய சுவிசேஷ ஊழியங்களே. மறுபிறப்பு (Regeneration) பற்றிய தெளிவான போதனைகளை போதகர்களும், சுவிசேஷம் அறிவிப்பவர்களும் அறிந்துவைத்திராததால் மனித இரட்சிப்புக்கு ஆவியானவரின் செயலில் முற்றாகத் தங்கியிராமல் மனிதனின் செயல்களில் நம்பிக்கை வைக்கிறார்கள். இந்தத் தவறான இறையியல் நம்பிக்கைகள் சுவிசேஷத்தை பலவீனப்படுத்தி, சபைகளையும் ஆத்மீக பலவீனமுள்ள நிலையில் வைத்திருக்கின்றன.

இந்நூலில், மனித சித்தம் எந்த நிலையில் இருக்கிறதோ (பாவம் அல்லது கிருபை) அந்த நிலைக்கேற்ப அது முழுச் சுயாதீனத்தோடு இயங்குகிறது என்பதை வேதம் மற்றும் 1689 விசுவாச அறிக்கை, கிறிஸ்தவ வரலாற்று இறையியல் ஆகியவை தரும் விளக்கத்தின் அடிப்படையில் விளக்கியிருக்கிறேன். மனித சித்தம் சுதந்திரமாக இயங்குகிறது என்பதை சீர்திருத்த கிறிஸ்தவர்கள் எதிர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இன்று நேற்றில்லாமல் இருந்து வருகிறது. அந்தக் குற்றச்சாட்டு உண்மையானதல்ல என்பதை இந்நூல் நிச்சயம் விளக்கும். மனித சித்தம் எந்த நிலையில் இருக்கிறதோ அந்த நிலைக்கேற்ப சுதந்திரத்தோடு இயங்குகிறது என்றே சீர்திருத்தப் போதனை எப்போதும் விளக்கியிருக்கிறது.

மனித சித்தம் பாவநிலையில் அதற்கு அடிமைப்பட்டு சுதந்திரமாக பாவத்தைச் செய்துவருகிறது. பாவநிலையில் ஆவிக்குரிய ஆற்றலை அது இழந்து நிற்கிறது. இருந்தபோதும், மனிதன் அந்நிலையில் பொறுப்புள்ளவனாகவும், கர்த்தருக்கு கணக்குக்கொடுக்க வேண்டியவனாகவும் இருக்கிறான். ஆத்மீக ஆற்றல் இல்லாத மனிதன் தன்னை விசுவாசிக்கும்படி கர்த்தர் அவனுக்கு எப்படிக் கட்டளையிட முடியும்? கர்த்தரின் இறையாண்மையும், மனிதனின் பொறுப்பும் எப்படிப் பொருந்திப்போக முடியும்? முன்குறித்தல், தெரிந்துகொள்ளுதல் போன்ற போதனைகளால் மனித சித்தத்திற்குப் பாதிப்பு ஏற்படுகிறதா? போன்ற கேள்விகளுக்கும் இந்நூலில் பதில் தந்திருக்கிறேன். அத்தோடு. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வேதபூர்வமாக எவ்விதத் தயக்கமும் காட்டாமல் இலவசமாக ஆத்துமாக்களுக்கு அவர்களுடைய சித்தத்தைக் குறிவைத்து எவ்வாறு பிரசங்கிப்பது என்பதை விளக்கும் ஒரு அதிகாரமும் இந்நூலில் வந்திருக்கிறது. தற்காலத்துப் போதகர்களும், இறையியல் மாணவர்களும், ஆத்துமாக்களும் சிந்தித்துப் புரிந்துகொள்ளவேண்டிய முக்கிய போதனை மனிதனுடைய சித்தத்தின் நிலை பற்றியது. இறையியல் நூலாக இருந்தாலும் எளிமையாகப் புரிந்துகொள்ளக்கூடியவிதத்தில் எழுத முயற்சி செய்திருக்கிறேன். இது ஆராய்ந்து வாசிக்கவேண்டிய, தற்காலத்தில் நம்மினத்துக்கு அவசியமான இறையியல் சத்தியத்தை விளக்கும் நூல். இதை வாசித்து கர்த்தரின் கிருபையால் மனித சித்தம் பற்றிய உங்களுடைய நம்பிக்கைகள் வேதபூர்வமாக அமைய அவர் கிருபை பாராட்டட்டும்.

நூலை வெளியிடும் சீர்திருத்த வெளியீடுகளுக்கும், நூலை சிரத்தையோடு தயாரித்து அச்சுக்குப் போகும்வரை அனைத்து விஷயங்களையும் கவனித்துக்கொண்ட சீர்திருத்த வெளியீடுகளின் நிர்வாகியான ஜேம்ஸுக்கும், நூலை சரிபார்த்து துணை செய்த பாலசுப்பிரமணியத்திற்கும் (மதுரை), இது வெளிவரவேண்டுமென்று ஆர்வத்தோடு எனக்கு ஊக்கமளித்து வந்திருக்கும் நண்பர்களுக்கும், இந்த இலக்கியப்பணி தொடர எனக்குப் பக்கபலமாக இருந்துவரும் என் மனைவிக்கும், சபையாருக்கும், நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கர்த்தரின் பணியில்,<br>
ஆர். பாலா

# 1

# மனித சித்தம்: உன்னால் முடியும்!

என்ன இப்படியொரு தலைப்பு என்று நினைக்கிறீர்களா? அதை அவசியத்தோடுதான் கொடுத்திருக்கிறேன். கடந்த ஐம்பது வருட காலமாக நம்மினத்தில் சுவிசேஷப்பணியைப் பொறுத்தவரையில் மனிதன் பாவத்தில் இருந்து தன்னை மீட்டுக்கொள்ளவும், பரலோகத்துக்குப் போகவும்கூடிய ஆத்மீக வல்லமையை இயல்பிலேயே கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கையில்தான் பெரும்பாலும் சுவிசேஷப்பணிகள் நடந்துவருகின்றன. அது தவறு என்று நாம் சுட்டிக்காட்டினால், மனிதனுக்கு இதில் பங்கில்லையென்றால் சுவிசேஷம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே என்று நம்மைப் பார்த்து எகத்தாளமாகக் கேட்பார்கள். மனிதன் தன்னை இரட்சித்துக் கொள்ளக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கையில் பெரும்பாலானவர்கள் 'உன்னால் முடியும் தம்பி' என்று சுவிசேஷம் சொல்லிவருவதால்தான் இந்த அதிகாரத்தில் மிகவும் முக்கியமானதொரு வேதபோதனையை அறிமுகப்படுத்தப் போகிறேன். அந்த வேதபோதனை மனிதனுடைய சித்தத்தின் (The Will of Man) தன்மை பற்றியது. மனிதனுடைய சித்தம் என்பதைக் கொஞ்சம் விளக்க முடியுமா? என்று சிலர் கேட்கலாம். அந்தக் கேள்வி அவசியம் தான். ஒரு காரியத்தை மனிதன் செய்வதற்கு அவனைத் தீர்மானிக்க வைக்கும் அவனுடைய இருதயத்தின் பகுதியையே சித்தம் என்று அழைக்கிறோம். இந்தச் சித்தமே மனிதன் எந்தக் காரியத்தையும் செய்யவைக்கிறது. இது மனிதனின்

இருதயத்தின் ஓர் அங்கம். நம்மிலிருக்கும், பல காரியங்களையும் நாம் சிந்திக்கும் அங்கத்துக்கு மனம் அல்லது இருதயம் என்று பெயர். நாம் ஒரு விஷயத்தை இந்த இருதயத்தின் மூலம் சிந்தித்துப் பார்த்து அந்த விஷயத்தை செய்யத் தீர்மானிக்கும் அங்கத்திற்குத் தான் 'சித்தம்' என்று பெயர்.

இந்த சித்தம், மனிதனில் எத்தகைய தன்மையில் இருக்கிறது, செயல்படுகிறது என்பதைத்தான் நாம் இந்த நூலில் அலசி ஆராய்ந்திருக்கிறேன். இந்த ஆய்வு மனிதவியலில் ஒரு பகுதி பற்றிய வேத ஆய்வாக இருக்கிறது. இந்த ஆய்வு அத்தனை அவசியமா? என்று நீங்கள் கேட்கலாம். ஏற்கனவே மேலே நான் சொல்லியிருப்பதுபோல் 'உன்னால் முடியும்' என்று சிலர் ஆணித்தரமாகச் சொல்லுவதற்கு காரணம் அவர்கள் ஆவிக்குரிய எந்தக் காரியத்தையும் பாவியான மனிதனால் செய்யமுடியும் என்ற உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருப்பதால்தான். இந்த நம்பிக்கை வேத அடிப்படையில் அமைந்ததா என்பதைத்தான் நான் விளக்கப்போகிறேன்.

மனித சித்தத்தின் தன்மை பற்றி திருச்சபை ஆரம்பித்த காலத்தில் இருந்தே விவாதங்கள் இருந்து வந்திருக்கின்றன. இந்த விவாதம் சபை ஆரம்பித்து 5ம் நூற்றாண்டிலேயே ஆரம்பித்து விட்டது. மனித சித்தத்தின் தன்மை பற்றிய விவாதத்துக்கு மூல காரணம் மனிதனைப் பாவம் எந்தவகையில் ஆதாமின் வீழ்ச்சிக்குப்பிறகு பாதித்தது என்பதில் மாறுபாடான எண்ணங்கள் தோன்றியதுதான். 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த பெலேஜியஸ் (Pelagius) என்ற மனிதன், பாவம் எந்த வகையில் மனிதனைப் பாதித்தது என்பதில் வேதத்திற்கு மாறுபாடான கருத்துக்களைத் தெரிவிக்க ஆரம்பித்தான். பாவம் மனிதனை முழுமையாக, அவனுடைய சகல பாகங்களையும் பாதித்ததா? இல்லையா? என்பதே கேள்வியாக இருந்தது. பெலேஜியஸ், நல்லது கெட்டதை செய்யும்படி சுயமாகச் செயல்படும் சித்தத்தை வீழ்ச்சிக்குப் பிறகும் மனிதன் தொடர்ந்து தன்னில் கொண்டிருக்கிறான் என்று விளக்கினான். ஆகவே, வீழ்ச்சியும் (Fall), மூல பாவமும் (Original sin) மனிதனை முழுமையாகப் பாதிக்கவில்லை என்பது பெலேஜியஸின் முடிவாக இருந்தது. இந்தவகையில் சிந்திக்க

ஆரம்பித்த பெலேஜியஸ் இறுதியில் மனிதன் பாவியல்ல என்ற முடிவெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.

பெலேஜியனின் இந்தக் கருத்துக்களை அன்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளவில்லை. பெலேஜியஸின் பாவத்தைப் பற்றிய போதனைகள் வேத போதனைகளுக்கு அடியோடு எதிராக இருந்தன. அதே காலத்தில் வாழ்ந்த இறையியல் அறிஞராக இருந்த ஆகஸ்தீன் (Augustine) இந்த விஷயம் பற்றி பெலேஜியஸோடு அநேக தர்க்கங்களில் ஈடுபட்டார். பெலேஜியனின் போதனை தவறு என்று சுட்டிக்காட்டி, மனிதனைப் பாவம் முழுமையாகப் பாதித்திருப்பது மட்டுமல்ல அவனுடைய சித்தம் ஆவிக்குரிய காரியங்களைச் செய்யமுடியாதபடி வலிமையிழந்த நிலையில் இருக்கிறது என்றும் விளக்கினார். திருச்சபை அன்று ஆகஸ்தீனின் போதனையையே ஏற்றுக்கொண்டது. இந்தளவுக்கு இந்த விஷயம் ஏன் பெரிதுபடுத்தப்பட்டது என்று நீங்கள் கேட்கலாம். இந்த விஷயம் சுவிசேஷத்தின் அடித்தளமாக இருப்பதால் தான் ஆகஸ்தீன் இதுபற்றி பெலேஜியஸோடு தர்க்கங்களில் ஈடுபட்டார். மனிதனுடைய சித்தம் பாவத்தால் பாதிக்கப்படாமல் ஆவிக்குரிய தீர்மானங்களை அவன் நினைத்தபடி எடுக்கக்கூடிய நிலையில் இருக்குமானால் கிறிஸ்தவ சுவிசேஷத்துக்கு அவசியமில்லாமல் போய்விடும் என்பதை ஆகஸ்தீன் உணர்ந்திருந்தார். வீழ்ச்சிக்குப்பிறகு ஆவிக்குரிய நிலையை முற்றாக மனிதன் இழந்துபோயிருந்ததாலேயே அவனுடைய ஆவிக்குரிய விடுதலைக்கு சுவிசேஷம் தேவைப்படுகிறது. ஆவிக்குரிய மாற்றத்தை அளிக்கக்கூடிய பெலனுள்ளதாக சுவிசேஷம் மட்டுமே இருக்கிறது. ஆவிக்குரிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நிலை மனிதனுக்கு இருந்தால் சுவிசேஷம் வலிமை குறைந்ததாக, இறையாண்மையற்றதாக மாறிவிடும். இதைத் தெளிவாக உணர்ந்தபடியால்தான் ஆகஸ்தீன் பெலேஜியஸினுடைய போதனைக்கு மறுப்புத் தெரிவித்து வேதபோதனையை நிலைநிறுத்த வேண்டிய நிலமை ஏற்பட்டது.

பெலேஜியனுடைய காலத்துக்குப் பிறகு இந்த விஷயம் 16ம் நூற்றாண்டில் திருச்சபை சீர்திருத்தத்தை கர்த்தர் ஆரம்பித்தபோது

மறுபடியும் தலைதூக்கியது. ரோமன் கத்தோலிக்க போதனை மனித சித்தம் நடுநிலையில் (Neutral) நன்மை, தீமை இரண்டையும் சமநிலையில் செய்யக்கூடியதாக இருக்கிறது என்று போதித்தது. அதற்கெதிராக மார்டின் லூத்தர் (Martin Luther) 'சித்தத்தின் அடிமைத்தனம்' (*The Bondage of the Will*) என்ற நூலை எழுதி வெளியிட்டு மனித சித்தம் பாவத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு, மனிதன் ஆத்மீக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலையில் இருக்கிறான் என்று போதித்தார். இதுவே சீர்திருத்தவாதம் ஆரம்பித்த காலத்தில் அதன் நடுமையமான (Central) போதனையாக இருந்தது. லூத்தரைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினதும், கிறிஸ்தவத்தினதும் ஆணிவேராக இந்த விஷயத்தைக் கருதினார். லூத்தர் இந்த விஷயத்தில் இராஸ்மஸோடு (Erasmus) ஈடுபட்ட தர்க்கங்கள் வரலாறறிந்தவை.

சீர்திருத்தவாத காலத்துக்குப் பிறகு 18ம் நூற்றாண்டில் மனித சித்தம் பற்றிய பிரச்சனையைச் சார்ள்ஸ் பினி (Charles Finney) ஆரம்பித்து வைத்தார். மனித சித்தம் பற்றிய அவருடைய தவறான போதனை ஆத்மீக விடுதலைக்காக ஒரு கிறிஸ்தவன் அவிசுவாசிக்கு உதவி கர்த்தரின் இராஜ்யத்துக்குள் அவன் நுழைய உதவ முடியும் என்று நம்ப வைத்தது. இந்த நம்பிக்கையால் சார்ள்ஸ் பினி 'கிறிஸ்துவிடம் வருவதற்கு விருப்பப்படுகிறவர்கள்' என்ற கூட்டத்தை உருவாக்கி அவர்கள் கிறிஸ்துவுக்காக ஆவிக்குரிய தீர்மானம் எடுக்கும் வழிமுறையை (Anxious Bench) முதன் முறையாக சபை வரலாற்றில் ஏற்படுத்தினார். இத்தகைய முறையை திருச்சபை அதற்கு முன் அறிந்திருக்கவில்லை. இதுவே பின்பு 20ம் நூற்றாண்டில் பில்லி கிரெகாமால் (Billy Graham) 'கிறிஸ்துவுக்காக ஆவிக்குரிய தீர்மானம்' (Decision for Christ) எடுக்கும் முறையாக சுவிசேஷக் கூட்டங்களில் பயன்படுத்தப்பட்டது. இவர்கள் எல்லோருமே பாவம் எந்தளவுக்கு மனிதனைப் பாதித்திருக்கிறது என்பதிலும், அவனுடைய சித்தத்தின் ஆவிக்குரிய நிலை எப்படியிருக்கிறது என்பதிலும் மாறுபாடான எண்ணங்களைக் கொண்டிருந்ததாலேயே இத்தகைய சுவிசேஷ அழைப்பு முறைகளை உருவாக்கியிருந்தார்கள்.

நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த 21ம் நூற்றாண்டின் நிலை என்ன? பொதுவாகவே கிறிஸ்தவர்கள் மத்தியில் பாவத்தின் நிலை

பற்றிய வேதபூர்வமான சிந்தனைகள் அதிகமாக இல்லாமல் இருப்பது நம் காலத்தில் நாம் பார்த்துக்கொண்டிருக்கிற துர்ப்பாக்கியமான நிலையாக இருக்கிறது. நான்காம் நூற்றாண்டிலும் சரி, பதினாறாம் நூற்றாண்டிலும் சரி, அதற்குப் பிறகு பதினெட்டாம் நூறாண்டிலும் சரி பாவத்தைப் பற்றியும், மனித சித்தத்தின் நிலை பற்றியும் வேதத்துக்கு முரணான போதனைகள் எழுந்தபோது ஆவிக்குரிய மனிதர்கள் அவற்றை இனங்கண்டு தோலுரித்துக்காட்டி திருச்சபைக்கு எதிரான ஆபத்துக்களுக்கு எதிராக நின்று வேதபோதனையளித்தார்கள். பதினாறாம் நூற்றாண்டில் இராஸ்மஸ் எடுத்த அதே நிலையையே இன்றைக்கு பொதுவாக கிறிஸ்தவர்கள் மத்தியில் காண்கிறோம். இதெல்லாம் நாம் பெரிதாக அலட்டிக்கொள்ள அவசியமில்லாத விஷயங்கள், தொடர்ந்து எந்தவிதமாகவும் சுவிசேஷத்தைச் சொல்லி பலரும் தேவ இராஜ்யத்துக்குள் வரும்படிப் பார்த்துக்கொண்டால் மட்டும் போதும் என்ற எண்ணப்பாட்டோடு இறையியல் போதனைகளை முற்றிலும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, வேத சத்தியங்களுக்குப் பெரிதும் மதிப்பளிக்காத ‘அலட்டிக்கொள்ளாத ஒரு கிறிஸ்தவத்தை’ விரும்பி வாழ்ந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். இதைச் சத்துள்ள, வல்லமையுள்ள, ஆவிக்குரிய அப்போஸ்தலர்கள் கால கிறிஸ்தவமாக என்னால் நினைக்க முடியவில்லை. ஆவியின் வல்லமையோடு வாழ்ந்தவர்கள் வேத சத்தியங்களும், போதனைகளும் அவசியமில்லை என்ற எண்ணத்தோடு வாழ்ந்ததாக வரலாறில்லை. கிறிஸ்தவத்தின் ஆணிவேரே வேத சத்தியங்கள்தான். வேத சத்தியங்களுக்கு மதிப்புக்கொடுக்காமலிருந்த காலங்கள் எல்லாம் சபை வரலாற்றில் ஆத்மீக விருத்தியற்ற காலங்களாகவே வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆவியின் வல்லமைக்கும், வேத சத்தியங்களுக்கும் தொடர்பில்லை என்ற எண்ணத்தோடு, வேத போதனைகளை அலட்சியப்படுத்துகின்ற ஆவிக்குரிய எழுச்சியை நாடிப் போய்க்கொண்டிருக்கிற கிறிஸ்தவத்தையே நாம் எங்கும் பரவலாகப் பார்க்கிறோம்.

பாவம் எத்தகையது, ஆதாமின் வீழ்ச்சி மனிதனை எந்தளவுக்குப் பாதித்துக் கர்த்தரின் பிரசன்னத்தில் இருந்து அவனை அகற்றி நியாயத்தீர்ப்புக்கு ஆளாக்கியிருக்கிறது, பாவத்தால் எந்தவிதத்தில் ஆத்மீக விடுதலைக்காக எதையும் செய்யமுடியாத, இயலாத

நிலையில் மனிதன் இருக்கிறான் என்ற வேதவிளக்கங்களை அறியாமல் இருக்கும் திருச்சபை சுவிசேஷத்தின் மகிமையை அறியாமல்தான் இருந்து வரமுடியும். அந்த நிலை நம்மினத்தில் தொடரக்கூடாது என்ற ஆத்மீக வைராக்கியத்தோடும், எண்ணங்களோடும் மட்டுந்தான் இந்நூலில் மனித சித்தம் பற்றி விளக்கியிருக்கிறேன்.